114. Keezhadhi excavation suggests that ———— century onwards urbanization has been occurred in Tamil Nadu.

(A) 3rd Century BCE

(B) 4th Century BCE

(C) 5th Century BCE

(D) 6th Century BCE

(E) Answer not known

தமிழ்நாட்டில் நகரமயமாதல் ———— நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது என்பதை கீழடி அகழாய்வு கூறுகின்றது.

(A) 3-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.

(B) 4-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.

(C) 5-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.

(D) 6-ம் நூற்றாண்டு பொ.ஆ.மு.

(E) விடை தெரியவில்லை

115. What removes inner negativity of a mankind like a lamp according to Valluvar?

(A) ✓ Lamp with truth's pure radiance

(B) Light of the Family

(C) Blessed Lamp

(D) Lamp of Penance

(E) Answer not known

அகத்தின் இருளைப் போக்கும் விளக்காக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

(A) பொய்யா விளக்கு

(B) குடும்ப விளக்கு

(C) அருள் விளக்கு

(D) தவ விளக்கு

(E) விடை தெரியவில்லை

116. How does Valluvar portray meat eaters?

(A) Irregular

(B) ✓ Unkind

(C) Ignorant

(D) Penniless

(E) Answer not known

புலாலை உணவாக்கிக் கொள்பவரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?

(A) முறையற்றவர்

(B) அருளற்றவர்

(C) அறிவற்றவர்

(D) பொருளற்றவர்

(E) விடை தெரியவில்லை

117. "The fire outside can envelop one to eternal sleep;.....
but.... when cannot one sleep?

(A) One cannot sleep in the crisis of poverty

(B) One cannot sleep with the hoard of riches

(C) One cannot sleep afflicted in illness

(D) One cannot sleep in continuous misery

(E) Answer not known

நெருப்பின் நடுவில் கூடப் படுத்துத் தூங்கலாம்.
ஆனால், எப்போது தூங்க முடியாது?

(A) வறுமையிலிருக்கும் போது தூங்கமுடியாது

(B) செல்வம் நிறைந்திருக்கும்போது தூங்கமுடியாது

(C) நோயின் கடுமை மிகுந்திருந்தால் தூங்க முடியாது

(D) துன்பம் தொடர்ந்து வந்து கொண்டிருந்தால் தூங்க முடியாது

(E) விடை தெரியவில்லை

118. Who according to Valluvar becomes happy to be together but despairs separation?

(A) Profession of Poets

(B) Agricultural Industry

(C) Medical Field

(D) Trade and Commerce

(E) Answer not known

சேரும் போது மகிழ்வதும் பிரியும் போது மனம் கலங்குவதும் யாருடைய தொழிலாக வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) புலவர் தொழில்

(B) உழவர் தொழில்

(C) மருத்துவர் தொழில்

(D) வணிகர் தொழில்

(E) விடை தெரியவில்லை

121. Kattabomman was hanged to death was executed by

(A) Col. Heron

(B) ✓ Major Bannerman

(C) Edward Clive

(D) John Cradock

(E) Answer not known

கட்டபொம்மனை தூக்கிலிட்டு கொலை செய்வதை நிறைவேற்றியவர்

(A) கர்னல் ஹரான்

(B) மேஜர் பானர்மென்

(C) எட்வர்ட் கிளைவ்

(D) ஜான் கிரடாக்

(E) விடை தெரியவில்லை

160. Who was the first woman to pay penalty for violation of salt laws during the Civil Disobedience Movement in Tamil Nadu?

(A) ✓ Rukmani Lakshmipathi

(B) Muthulakshmi Ammaiyar

(C) Muvalur Ramamirtham

(D) Annie Besant

(E) Answer not known

தமிழகத்தில் சட்ட மறுப்பு இயக்கத்தின் போது உப்புச் சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி யார்?

(A) ருக்மணி லட்சுமிபதி

(B) முத்துலட்சுமி அம்மையார்

(C) மூவலூர் இராமாமிர்தம்

(D) அன்னி பெசன்ட்

(E) விடை தெரியவில்லை

161. The Fort that was not controlled by Pulithevar is

(A) Nerkattumseval

(B) Vasudevanallur

(C) Panayur

(D) Sivagiri

(E) Answer not known

பூலித்தேவரின் கட்டுப்பாட்டிற்குள் இல்லாத கோட்டை ———— ஆகும்.

(A) நெற்கட்டும்செவல்

(B) வாசுதேவநல்லூர்

(C) பனையூர்

(D) சிவகிரி

(E) விடை தெரியவில்லை

162. Who among the following poet had relations with Odhisa country?

(A) Kamban

(B) Sekkilar

(C) Ottakuthar

(D) Jayamkondan

(E) Answer not known

ஒரிசா நாட்டோடு தொடர்புடைய புலவர் யார்?

(A) கம்பர்

(B) சேக்கிழார்

(C) ஒட்டக்கூத்தர்

(D) செயங்கொண்டார்

(E) விடை தெரியவில்லை

163. Whose enmity should be avoided?

(A) Hatred of Warriors

(B) ✓ Hatred of Word Ploughers (Writers)

(C) Hatred of loved ones

(D) Hatred of righteous men

(E) Answer not known

யாருடைய பகையைத் தவிர்க்க வேண்டும்?

(A) வில்லோர் உழவர் பகை

(B) சொல்லோர் உழவர் பகை

(C) அன்போர் உழவர் பகை

(D) பண்போர் உழவர் பகை

(E) விடை தெரியவில்லை

164. According to Valluvar under which King will the citizens prosper happily?

(A) The one who sustain good words

(B) ✓ The one who bears bitter criticism

(C) The one who cannot sustain harsh words

(D) The one who triumphs vengeance

(E) Answer not known

எப்படிப்பட்ட அரசனின் கீழ் மக்கள், தங்கி வாழ்வார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) மென்சொல் விரும்புவர்

(B) கடுஞ்சொல் பொறுப்பவர்

(C) கடுஞ்சொல் பொறுக்காதவர்

(D) பகைமையை வெல்பவர்

(E) விடை தெரியவில்லை

165. "Azhukkaarutaiyaan kan Aakkampondru illai". What is the meaning of "Azhukkaaru"?

(A) Wrath
(B) Absence of anger
(C) ✓ Envious
(D) Evil
(E) Answer not known

'அழுக்காறுடையான் கண் ஆக்கம்போன் றில்லை' – இதில் அழுக்காறு என்பதன் பொருள் யாது?

(A) சினம்
(B) வெகுளாமை
(C) பொறாமை
(D) தீமை
(E) விடை தெரியவில்லை

166. To what does Valluvar denote the timely benefit rendered in the kural "Kaalaththi Naarseydha Nandri"?

(A) Bigger than Knowledge
(B) Greater than the Ocean
(C) ✓ Greater than the World
(D) Higher than the Sky
(E) Answer not known

காலத்தினால் செய்த நன்றியை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?

(A) அறிவைவிடப் பெரியது
(B) கடலைவிடப் பெரியது
(C) உலகத்தைவிடப் பெரியது
(D) வானைவிடப் பெரியது
(E) விடை தெரியவில்லை

167. What helps virtue and also guards us from all evil?

(A) Patience

(B) ✓ Love

(C) Pride

(D) Education

(E) Answer not known

அறத்திற்கு மட்டுமன்று, மறத்திற்கும் துணை என்றுத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

(A) பொறுமை

(B) அன்பு

(C) பெருமை

(D) கல்வி

(E) விடை தெரியவில்லை

Various Social reformers, Social reform movements in Tamilnadu
(Overlapping with Unit 7 INM - Leaders)

168. Moovalur Ramamirdham was born in the district of

(A) Cuddalore

(B) ✓ Mayiladuthurai

(C) Thanjavur

(D) Kanniyakumari

(E) Answer not known

மூவலூர் இராமாமிர்தம் ———— மாவட்டத்தில் பிறந்தார்.

(A) கடலூர்

(B) மயிலாடுதுறை

(C) தஞ்சாவூர்

(D) கன்னியாகுமரி

(E) விடை தெரியவில்லை

169. 'Periyar' the title was conferred on him by Tamil Nadu Women Conference held in Madras on

(A) 1936

(B) 1937

(C) ✔ 1938

(D) 1939

(E) Answer not known

ஈ.வே.ராவிற்கு ———— ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

(A) 1936

(B) 1937

(C) 1938

(D) 1939

(E) விடை தெரியவில்லை

பொது அறிவு

ITI தரம்

TNPSC புதிய பாடத்திட்டத்தில் இதுவரை நடந்த தேர்வுகளில் கேட்கப்பட்ட

கேள்விகள் மற்றும் பதில்கள்

(பின்வரும் அனைத்து விடைகளும் *TNPSC* ஆல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டவை)

TNPSC பொது அறிவுத் தேர்வு - தொழிற்பயிற்சித் தரம்			
தேர்வின் பெயர்		FIELD SURVEYOR, DRAFTSMAN	
தேர்வு எண்	ஆண்டு	தேர்வு நாள்	Unit - 8
01	2022	November 6, 2022	13 கேள்விகள்

Tamilnadu Board Samacheer Kalvi 6th Social Science Term 3 History Chapter 1
Society and Culture in Ancient Tamizhagam

101. ———— Foreign accounts called Muziri as the "First Emporium of India".

(A) Natural History
(B) Geography
(C) The Periplus of the Erythrean sea
(D) Buddhist chronicles
(E) Answer not known

முசிறியை "இந்தியாவின் முதல் பேரங்காடி" என்று கூறும் வெளிநாட்டு நூல் ———— ஆகும்.

(A) இயற்கை வரலாறு
(B) புவியியல்
(C) எரித்திரியன் கடலின் பெரிப்ளஸ்
(D) புத்த பதிப்புகள் (நாட்குறி புத்தகம்)
(E) விடை தெரியவில்லை

103. Assertion [A] : Through the letter correspondence Velunachiyar asked 5000 infantry and 5000 cavalry strength to Hyder Ali.

Reason [R] : Velunachiyar conveyed her strong determination to fight the English.

(A) Both [A] and [R] are correct, but [R] is not the correct explanation of [A]

(B) Both [A] and [R] are wrong

(C) Both [A] and [R] are correct and [R] is the correct explanation of [A]

(D) [A] is wrong and [R] is correct

(E) Answer not known

கூற்று [A] : வேலு நாச்சியார் ஹைதர் அலியிடம் 5000 காலாட்படைகளும், 5000 குதிரைப் படைகளும் அனுப்பும் படி கடிதம் எழுதினார்.

காரணம் [R] : வேலு நாச்சியார் ஆங்கிலேயரோடு மோதுவதில் தீவிரமாக இருப்பதைத் தெளிவுபடுத்தினார்.

(A) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி எனினும் காரணம் [R] கூற்றை [A] சரியாக விளக்கவில்லை

(B) கூற்று [A] மற்றும் காரணம் [R] ஆகிய இரண்டுமே தவறானவை

(C) கூற்று [A] மற்றும் காரணம் [R] இரண்டும் சரி காரணம் [R] கூற்றை [A] சரியாகவே விளக்குகிறது

(D) கூற்று [A] தவறானது, காரணம் [R] சரியானது

(E) விடை தெரியவில்லை

113. Identify the personality :

He played a pivotal role in spreading rational ideas and scientific perception into politics of Tamilnadu. He worked for the welfare of farmers, workers and spread socialist thinking into politics. He was appointed as a member of the Indian National Congress.

(A) J.C. Kumarappa

(B) E.V.R. Periyar

(C) Singaravelar

(D) Maraimalai Adigal

(E) Answer not known

ஆளுமையை (நபரை) அடையாளம் காண்க.

இவர் தமிழக அரசியல் இயக்கத்தில் பகுத்தறிவு கருத்துக்கள் மற்றும் அறிவியல் பார்வைகளை ஏற்படுத்தியவர்; விவசாயிகள் மற்றும் தொழிலாளர்கள் நலனுக்காக பாடுபட்டவர்; இந்திய அரசியலில் சமதர்ம கருத்துக்களைப் பரப்பியவர்; இந்திய தேசிய காங்கிரஸின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்டவர்.

(A) ஜெ.சி. குமரப்பா

(B) ஈ.வே.ரா. பெரியார்

(C) சிங்காரவேலர்

(D) மறைமலை அடிகளார்

(E) விடை தெரியவில்லை

148. What is much tastier than the nectar from heaven in a family?

(A) Touch of Children

(B) Food messed up by the hand's of one's children

(C) Music of the flute

(D) Loving words of the beloved

(E) Answer not known

அமிழ்தத்தை விட இனிமையானது என்று வள்ளுவர் எதனைச் சுட்டுகின்றார்?

(A) மக்கள் மெய் தீண்டல்

(B) தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்

(C) புல்லாங்குழலின் இனிமை

(D) காதலி இன் 'சொல்'

(E) விடை தெரியவில்லை

149. "Navil thorum Noolnayam; polum payilthorum Thotarbu" whose association gives great pleasure?

(A) Association with innocence (Pethayar thodarbu)

(B) Association with women (Arivaiyar Thodarbu)

(C) Association with the genteel (Panbudaiyaalar Thodarbu)

(D) Association with the learned (Arivudaiyaar Thodarbu)

(E) Answer not known

"நவில் தொறும் நூல் நயம் போலும் பயில்தொறும் தொடர்பு" யாருடைய தொடர்பு இன்பம் தரும்?

(A) பேதையார் தொடர்பு

(B) அரிவையர் தொடர்பு

(C) பண்புடையாளர் தொடர்பு

(D) அறிவுடையவர் தொடர்பு

(E) விடை தெரியவில்லை

151. Choose the correct pair :

(A) Glass beads – Porunthal

(B) Shell wastes of Bangle – Keezhadi

(C) Furnace – Kodumanal

(D) Canoe – Auroville, Puducherry

(E) Answer not known

சரியான இணையைத் தேர்வு செய்க :

(A) கண்ணாடி மணிகள் – பொருந்தல்

(B) உடைந்த சங்கு வளையல் – கீழடி

(C) உருக்கு உலை – கொடுமணல்

(D) ஒரே மரத்தாலான படகின் பகுதி – புதுச்சேரியின் ஆரோவில்

(E) விடை தெரியவில்லை

152. Choose the correct answer :

(i) Velu Nachiyar was a Queen of Sivagangai.

(ii) Muthu Vaduganathar was killed in Kalaiyar Koil Battle, was the husband of Velu Nachiyar.

(iii) Kuyili a commander of Velu Nachiyar was the first suicide attacker.

(iv) With the help of Marudhu Brothers again Velu Nachiyar was crowned as Queen.

(A) (i), (ii) and (iv) are correct
(B) (i), (iii) and (iv) are correct
(C) (ii) and (iii) are correct
(D) All are correct
(E) Answer not known

சரியான விடையைத் தெரிவு செய்க :

(i) சிவகங்கையின் 'இராணி' வேலு நாச்சியார் ஆவார்.

(ii) காளையர் கோவில் போரில் கொல்லப்பட்ட முத்து வடுகநாதர் இராணி வேலு நாச்சியாரின் கணவராவார்.

(iii) வேலு நாச்சியாரின் நம்பிக்கைக்குரிய படைத் தளபதி குயிலி இவர் முதல் தற்கொலைப் படை வீரர் ஆவார்.

(iv) மருது சகோதரர்களின் உதவியுடன் வேலு நாச்சியார் மீண்டும் இராணியாக முடி சூட்டிக் கொண்டார்.

(A) (i), (ii) மற்றும் (iv) சரி
(B) (i), (iii) மற்றும் (iv) சரி
(C) (ii) மற்றும் (iii) சரி
(D) அனைத்தும் சரி
(E) விடை தெரியவில்லை

153. _____ showed his compassion and mercy on all living beings including plants.

(A) Ramalinga Adigal
(B) Iyothee Thasar
(C) Baba Ram Singh
(D) Guru Nanak
(E) Answer not known

_____ தன்னுடைய அன்பையும் இரக்கத்தையும் செடி கொடிகள் உட்பட அனைத்து உயிரினங்களிடத்திலும் காட்டியவர்.

(A) இராமலிங்க அடிகள்
(B) அயோத்திதாசர்
(C) பாபா ராம் சிங்
(D) குருநானக்
(E) விடை தெரியவில்லை

154. Choose the correct statement :

I. Periyar EV Ramasamy was the founder of the Self-Respect Movement.
II. People hailed him as 'Vaikom Veerar" (Hero of Vaikom).
III. He frequently wrote columns in the magazine under the 'pen name' "Chitra Puttiran".
IV. He also supported B.R. Ambedkar's demand for separate electorates to scheduled castes.

(A) I and IV are correct
(B) II and III are correct
(C) I, II and IV are correct
(D) II is correct
(E) Answer not known

சரியான கூற்றைத் தேர்வு செய்க.

I. பெரியார் ஈ.வெ.இராமசாமி சுய மரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார்
II. மக்கள் அவரை 'வைக்கம் வீரர்' என பாராட்டினர்
III. பெரியார் 'சித்திர புத்திரன்' எனும் புனை பெயரில் கட்டுரைகளை எழுதினார்
IV. B.R. அம்பேத்கார் அவர்களின் ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்தேர்தல் தொகுதிக் கோரிக்கையை பெரியாரும் ஆதரித்தார்.

(A) I மற்றும் IV சரி
(B) II மற்றும் III சரி
(C) I, II மற்றும் IV சரி
(D) II சரி
(E) விடை தெரியவில்லை

155. _____ was the first Queen to fight against the British colonial power in India.

(A) Kuyili
(B) Velu Nachiar
(C) Rani Mangammal
(D) Rani Lakshmi Bai
(E) Answer not known

இந்தியாவில் பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தை எதிர்த்துப் போரிட்ட முதல் பெண்ணரசி

(A) குயிலி
(B) வேலு நாச்சியார்
(C) ராணி மங்கம்மாள்
(D) ராணி இலட்சுமி பாய்
(E) விடை தெரியவில்லை

197. Which is considered as the greatest blame on human living by Valluvar?

(A) Transient life
(B) Life without progeny
(C) Infamous life
(D) Life without love
(E) Answer not known

மனித வாழ்க்கைக்குரிய பழியென்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(A) நிலையற்ற வாழ்வு
(B) மக்கட்பேறு இல்லாத வாழ்வு
(C) புகழற்ற வாழ்வு
(D) அன்பற்ற வாழ்வு
(E) விடை தெரியவில்லை

198. What will wipe away the wealth of the ruler?

(A) Anger of the wicked

(B) Incessant Rain

(C) Gifts given to flatterers

(D) Unbearable tears of the oppressed

(E) Answer not known

ஆள்வோரின் செல்வத்தைத் தேய்க்கும் படை எது?

(A) கொடியோரை ஒறுத்தல்

(B) ஒல்லாது வானம் பெயல்

(C) புகழ்ந்தாருக்குக் கொடுக்கப்படும் பரிசு

(D) ஆற்றாது அழுத கண்ணீர்

(E) விடை தெரியவில்லை

200. A niggard hand, o'erweening self-regard and mirth unseemly bring disgrace to men of kingly birth. What is the meaning of the word 'kingly birth' mentioned in the above verse?

(A) God

(B) King

(C) Superior

(D) Nobles

(E) Answer not known

"இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா
உவகையும் ஏதம் இறைக்கு"
இக்குறளில் குறிப்பிடும் 'இறை' என்பதன் பொருள்

(A) இறைவன்

(B) அரசன்

(C) உயர்ந்தவன்

(D) மேன்மக்கள்

(E) விடை தெரியவில்லை

TNPSC பொது அறிவுத் தேர்வு - தொழிற்பயிற்சித் தரம்			
தேர்வின் பெயர்		ROAD INSPECTOR	
தேர்வு எண்	ஆண்டு	தேர்வு நாள்	Unit 8 தமிழக வரலாறு
02	2023	May 7, 2023	14 கேள்விகள்

Question Starts from Next Page

142. Match the following:

(a)	Dravidian Home	1.	Maraimalai Adigal
(b)	Thozhilalan	2.	Rettaimalai Srinivasan
(c)	Tani Tamil Iyakkam	3.	Singaravelan
(d)	Jeeviya Saritha Surukkam	4.	Natesanar

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	3	2	4	1
(C)	4	2	1	3
(D)	2	1	3	4

(E) Answer not known

பொருத்துக.

(a)	திராவிடர் இல்லம்	1.	மறைமலையடிகள்
(b)	தொழிலாளன்	2.	இரட்டைமலை சீனிவாசன்
(c)	தனித்தமிழ் இயக்கம்	3.	சிங்கார வேலர்
(d)	ஜீவிய சரித சுருக்கம்	4.	நடேசனார்

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	1	2
(B)	3	2	4	1
(C)	4	2	1	3
(D)	2	1	3	4

(E) விடை தெரியவில்லை

143. What is the most sweetest thing that makes men happy? From the Kural "Mannuyirk Kellaam Inidhu"?

(A) Benefits a father confers on his son

(B) Benefits a son confers to his parents

(C) Knowing that the progeny excells them in knowledge

(D) Hearing the son as great Hero

(E) Answer not known

மன்னுயிர்க்கு எல்லாம் இனிது எது?

(A) தந்தை மகற்காற்றும் நன்றி

(B) மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி

(C) தம்மின் தம்மக்கள் அறிவுடைமை

(D) தன் மகனை மாவீரன் எனக் கேட்டல்

(E) விடை தெரியவில்லை

144. What is compared to the herbal tree grown at the center of a home town in the 'Kural'?

(A) Knowledgeable Person

(B) Generous Man

(C) Noble Person

(D) King

(E) Answer not known

ஊரின் நடுவே வளர்ந்து மருந்தாகும் மரத்தை வள்ளுவர் யாரோடு ஒப்பிடுகிறார்?

(A) அறிவுடையோர்

(B) பெருந்தகையார்

(C) சான்றோர்

(D) அரசர்

(E) விடை தெரியவில்லை

145. Which of the following pairs is not correct?

(i) Ilanjetchenni – Chenguttuvan

(ii) Mangulam – Tamil Brahmi inscription

(iii) Uruttirankannanar – Pattinappalai

(iv) Velir Chieftains – Thithiyan

(A) (i) only

(B) (ii) only

(C) (iii) only

(D) (iv) only

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றில் எந்த இணை தவறானது ?

(i) இளஞ்சேட்சென்னி – செங்குட்டுவன்

(ii) மாங்குளம் – தமிழ் பிராமி கல்வெட்டு

(iii) உருத்திரங்கண்ணனார் – பட்டினப்பாலை

(iv) வேளிர்குல சிற்றரசர் – திதியன்

(A) (i) மட்டும்

(B) (ii) மட்டும்

(C) (iii) மட்டும்

(D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

147. Where was Captain Lakshmi Sehgal born?

(A) Chennai

(B) Calcutta

(C) Tanjavur

(D) Singapore

(E) Answer not known

கேப்டன் லட்சுமி செகல் எங்கு பிறந்தவர்?

(A) சென்னை

(B) கல்கத்தா

(C) தஞ்சாவூர்

(D) சிங்கப்பூர்

(E) விடை தெரியவில்லை

148. What according to Valluvar is the way that will not destroy one's own wealth?

(A) Avoid theft

(B) Being free from covetousness

(C) Shun falsehood

(D) Be unfriendly

(E) Answer not known

ஒருவருடைய செல்வம் குறையாமல் இருக்க வள்ளுவர் கூறும் வழி யாது?

(A) களவு செய்யாமை

(B) பிறர் பொருள் விரும்பாமை

(C) பொய் சொல்லாமை

(D) நட்பு பாராட்டாமை

(E) விடை தெரியவில்லை

185. Assertion and Reason Type :

Assertion (A) : Pulithevar tried to get the support of Hyder Ali and the French.

Reason (R) : Hyder Ali could not help Pulithevar as he was already in a serious conflict with the Marathas.

(A) Both (A) and (R) are correct, but (R) is not the correct explanation of (A)

(B) Both (A) and (R) are wrong

(C) Both (A) and (R) are correct and (R) is the correct explanation of (A)

(D) (A) is wrong and (R) is correct

(E) Answer not known

சரியான கூற்றைத் தேர்வு செய்க.

கூற்று (A) : புலித்தேவர், ஹைதர் அலி மற்றும் பிரெஞ்சுக்காரர்களின் உதவியைப் பெற முயன்றார்.

காரணம் (R) : மராத்தியர்களோடு ஏற்கனவே தொடர் போர்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததால் ஹைதர் அலியால் புலித்தேவருக்கு உதவமுடியாமல் போனது.

(A) கூற்று (A) மற்றும் காரணம் (R) இரண்டும் சரி எனினும் காரணம் (R) கூற்று (A) க்கான சரியான விளக்கம் இல்லை

(B) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகிய இரண்டுமே தவறானவை

(C) கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகியவை சரி, காரணம் (R) கூற்று (A) வை சரியாகவே விளக்குகிறது

(D) கூற்று (A) தவறானது காரணம் (R) சரியானது

(E) விடை தெரியவில்லை

187. Name the Tamil book was published in Goa in the year 1578.

(A) Viracholiyam
(B) Ilakkana Vilakkam
(C) Thambiran Vanakkam
(D) Tolkappiyam
(E) Answer not known

1578 இல் கோவாவில் வெளியிடப்பட்ட தமிழ் புத்தகத்தின் பெயர் கூறுக.

(A) வீரசோழியம்
(B) இலக்கண விளக்கம்
(C) தம்பிரான் வணக்கம்
(D) தொல்காப்பியம்
(E) விடை தெரியவில்லை

188. To whom does Valluvar compare the wrong doing ascetics?

(A) Actor
(B) Fradulent
(C) Sinner
(D) Hunter
(E) Answer not known

தகாத செயல்களில் ஈடுபடும் தவக்கோலத்தில் உள்ளவர்களை வள்ளுவர் யாருடன் ஒப்பிடுகிறார்?

(A) நடிகர்
(B) வஞ்சகர்
(C) பாவி
(D) வேட்டுவர்
(E) விடை தெரியவில்லை

189. What is compared by Valluvar to the sweet music of Veena (Yaazh)?

(A) Child's Babble

(B) Parrot's speech

(C) Beloved's words

(D) Poet's words

(E) Answer not known

யாழைவிட இனிமையானது என்று வள்ளுவர் எதனை ஒப்பிடுகிறார்?

(A) மழலைச் சொல்

(B) கிளியின் சொல்

(C) காதலி சொல்

(D) கவிஞர் சொல்

(E) விடை தெரியவில்லை

190. One who possess these are considered as lion among Kings

(i) Army, Subjects, Wealth

(ii) Ministers, Allies, Fort

(iii) Fearlessness, Charity and Education

(A) (i) alone is correct

(B) (i) and (ii) are correct

(C) (i) and (iii) are correct

(D) (iii) alone is correct

(E) Answer not known

எவற்றை உடையவர் ஆள்பவரில் ஏறு போன்றவர்?

(i) படை, குடி, கூழ்

(ii) அமைச்சு, நட்பு, அரண்

(iii) அஞ்சாமை, ஈகை, கல்வி

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

191. What are the three things to be shunned in order to dispel pain and sorrow?

(A) Lust, Wrath and Delusion

(B) Knowledge, Love, Affection

(C) Fear, Shyness, Blindness

(D) Happiness, Wrath, Sorrow

(E) Answer not known

'நாமம் கெடக் கெடுநோய்' என்று வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

(A) காமம், வெகுளி, மயக்கம்

(B) அறிவு, அன்பு, பாசம்

(C) அச்சம், நாணம், மடம்

(D) உவகை, வெகுளி, அழுகை

(E) விடை தெரியவில்லை

192. Ettuthogai and Pathupattu are the collection of ———— poems.

(A) 2400

(B) 3400

(C) 4400

(D) 5400

(E) Answer not known

எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் ஏறத்தாழ ———— பாடல்களைக் கொண்ட இலக்கிய கருவூலமாகும்.

(A) 2400

(B) 3400

(C) 4400

(D) 5400

(E) விடை தெரியவில்லை

194. ———————— voiced the interest of the depressed clauses in the Round Table Conferences.

(A) T.M. Nair

(B) Rettaimalai Srinivasan

(C) M.C. Rajah

(D) Pandithar Iyothee Thassar

(E) Answer not known

ஒடுக்கப்பட்ட மக்களின் கருத்துகளுக்காக வட்டமேஜை மாநாட்டில் குரல் கொடுத்தவர்

(A) டி.எம். நாயர்

(B) இரட்டைமலை சீனிவாசன்

(C) எம்.சி. ராஜா

(D) பண்டிதர் அயோத்தி தாசர்

(E) விடை தெரியவில்லை

பொது அறிவு

SSLC தரம்

TNPSC புதிய பாடத்திட்டத்தில் இதுவரை நடந்த தேர்வுகளில் கேட்கப்பட்ட

கேள்விகள் மற்றும் பதில்கள்

(பின்வரும் அனைத்து விடைகளும் *TNPSC* ஆல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டவை)

TNPSC பொது அறிவுத் தேர்வு - பத்தாம் வகுப்பு தரம்			
தேர்வின் பெயர்		GROUP-IV SERVICES	
New தேர்வு எண்	ஆண்டு	தேர்வு நாள்	8. Unit - 8
1	2022	July 24, 2022	16 கேள்விகள்

101. Arrange the following in chronological order with respect to their Chief Ministership in Madras Presidency

1. P.T. Rajan
2. A. Subburayulu Reddiar
3. P. Munusamy Naidu
4. C. Rajaji
5. P. Subbarayan

(A) 2, 4, 3, 5, 1

(B) 2, 5, 3, 1, 4

(C) 5, 3, 1, 2, 4

(D) 3, 1, 5, 2, 4

(E) Answer not known

காலவரிசைப்படி மதராஸ் மாகாணத்தின் முதலமைச்சர்களை வரிசைப்படுத்துக.

1. பி.டி. ராஜன்
2. ஏ. சுப்புராயுலு ரெட்டியார்
3. பி. முனுசாமி நாயுடு
4. சி. ராஜாஜி
5. பி. சுப்பராயன்

(A) 2, 4, 3, 5, 1

(B) 2, 5, 3, 1, 4

(C) 5, 3, 1, 2, 4

(D) 3, 1, 5, 2, 4

(E) விடை தெரியவில்லை

108. Find the odd one out.

(A) Illamchetchenni
(B) Kochchenganan
(C) Perum Cheral Irumporai
(D) Perunarkilli
(E) Answer not known

பொருந்தாததைக் கண்டுபிடி.

(A) இளஞ்சேட்சென்னி
(B) கோச்செங்கணான்
(C) பெருஞ்சேரல் இரும்பொறை
(D) பெருநற்கிள்ளி
(E) விடை தெரியவில்லை

109. Which of the following statements are true about the post sangam age?

(i) Pathinen keel kanakku texts, include eighteen texts which mostly deal with ethics and morel codes.
(ii) The most important of these Thirukkural and Naladiyar.
(iii) Silappathikaram and Manimekalai are the two texts deals with Cultural and Religious history.

(A) (i) only True
(B) (ii) only True
(C) (i), (ii) only True
(D) (i), (iii) only True
(E) Answer not known

கீழ்கண்ட வாக்கியங்களில் சங்க மருவிய காலத்தின் சரியான கூற்று எது?

(i) பதினெட்டு நூல்களை உள்ளடக்கிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலும் ஒழுக்க நெறிமுறைகளைப் பற்றி கூறுகிறது.
(ii) அவற்றுள் திருக்குறளும், நாலடியாரும் முதன்மையானதாகும்.
(iii) சிலப்பதிகாரமும், மணிமேகலையும் பண்பாடு மற்றும் சமயத்தை பற்றி கூறுகின்றன.

(A) (i) மட்டும் சரி
(B) (ii) மட்டும் சரி
(C) (i), (ii) மட்டும் சரி
(D) (i), (iii) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

110. Arrange the following events in the Chronological order:

1. Death of Pulithevar
2. Death of Kuyili
3. Death of Kattabomman
4. Death of Maruthu Brothers

(A) 2, 3, 1, 4
(B) 1, 2, 3, 4
(C) 1, 3, 2, 4
(D) 3, 1, 4, 2
(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளை காலவரிசைப்படுத்துக.

1. புலித்தேவரின் இறப்பு
2. குயிலியின் இறப்பு
3. கட்டப்பொம்மனின் இறப்பு
4. மருதுசகோதரர்களின் இறப்பு

(A) 2, 3, 1, 4
(B) 1, 2, 3, 4
(C) 1, 3, 2, 4
(D) 3, 1, 4, 2
(E) விடை தெரியவில்லை

112. Which of the following was founded by Rettaimalai Srinivasan?

(A) Sakya Buddhist Society
(B) Advaidananda Sabha
(C) All India Depressed Classes Association
(D) Adi Dravida Mahajana Sabha
(E) Answer not known

பின்வருவனவற்றுள் எந்த சபை இரட்டைமலை சீனிவாசனால் துவங்கப்பட்டது?

(A) சாக்கிய பௌத்த சங்கம்
(B) அத்வைதானந்த சபா
(C) அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம்
(D) ஆதி திராவிட மகாஜன சபை
(E) விடை தெரியவில்லை

Overlapping with Unit 7 INM

115. Arrange the following Newspaper's and Journals of Thanthai Periyar in chronological order.

1. Paguththarivu
2. Viduthalai
3. Kudiarasu
4. Puratchi

(A) 4, 2, 3, 1
(B) 3, 4, 1, 2
(C) 3, 2, 4, 1
(D) 2, 3, 1, 4
(E) Answer not known

கீழ்க்கண்டவற்றுள் தந்தை பெரியாரின் செய்தித்தாள்களையும், இதழ்களையும் கால முறைப்படி வரிசைப்படுத்துக.

1. பகுத்தறிவு
2. விடுதலை
3. குடியரசு
4. புரட்சி

(A) 4, 2, 3, 1
(B) 3, 4, 1, 2
(C) 3, 2, 4, 1
(D) 2, 3, 1, 4
(E) விடை தெரியவில்லை

138. Under the duties of the father; what is the duty of the father to his son – as found in the Kural.
"Thanthai magarkaatrum nandri" –?

(A) Avaiyil Munthi irukka Seyal
(B) Selvathil Munthirukka Seyal
(C) Kudiperumaiyil Munthiyirukka Seyal
(D) Nermaiyil Munthi irukka Seyal
(E) Answer not known

"தந்தை மகற்காற்றும் நன்றி"
என்னும் திருக்குறளின் படி தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி எது?

(A) அவையில் முந்தியிருக்கச் செய்தல்
(B) செல்வத்தில் முந்தியிருக்கச் செய்தல்
(C) குடிப்பெருமையில் முந்தியிருக்கச் செய்தல்
(D) நேர்மையில் முந்தியிருக்கச் செய்தல்
(E) விடை தெரியவில்லை

139. The first surveyor of the Archaeological Survey of India (ASI) was

(A) Charles Mason
(B) Alexander Burnes
(C) Alexander Cunningham
(D) Sir John Marshal
(E) Answer not known

இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையின் முதல் ஆய்வாளர்

(A) சார்லஸ் மேசன்
(B) அலெக்சாண்டர் பர்ன்ஸ்
(C) அலெக்சாண்டர் கன்னிங்ஹாம்
(D) சர் ஜான் மார்ஷல்
(E) விடை தெரியவில்லை

149. True righteous/virtuous life consists in the avoidance of four things, what are they?

(A) Jealousy, Ambitiousness, Anger, Unwanted Abusive Words

(B) Aram, Porul, Inbam, Veedu

(C) Enjoy, Sound, Laugh, Peace

(D) Lust, Anger, Doubt and Action

(E) Answer not known

"இழுக்கா இயன்றது அறம்" – எவை?

(A) அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல்

(B) அறம், பொருள், இன்பம், வீடு

(C) மகிழ்ச்சி, சத்தமிடுதல், சிரித்தல், அமைதி

(D) காமம், வெகுளி, மயக்கம், வினை

(E) விடை தெரியவில்லை

150. Choose the correct Pairs :

1.	Ondiveeran	–	Maruthu Brothers
2.	Gopala Nayakar	–	Dindigul League
3.	Kuyili	–	Pulithevar
4.	Muthu Vaduga Nathar	–	Kalaiyaarkovil Battle

(A) 1 and 3 are correct
(B) 1 and 2 are correct
(C) 2 and 3 are correct
(D) 2 and 4 are correct
(E) Answer not known

சரியான இணைகளைத் தேர்வு செய்க.

1.	ஒண்டிவீரன்	–	மருது சகோதரர்கள்
2.	கோபால நாயக்கர்	–	திண்டுக்கல் கூட்டமைப்பு
3.	குயிலி	–	புலித்தேவர்
4.	முத்துவடுகநாதர்	–	காளையார் கோவில் போர்

(A) 1 மற்றும் 3 சரி
(B) 1 மற்றும் 2 சரி
(C) 2 மற்றும் 3 சரி
(D) 2 மற்றும் 4 சரி
(E) விடை தெரியவில்லை

151. How does Valluvar compare the wealth of a wise man?

(A) Tank brimming with water (B) Ocean

(C) River (D) Lake

(E) Answer not known

ஒருவனுடைய செல்வம் சமுதாயத்திற்குப் பயன்படுவதை வள்ளுவர் எதனோடு ஒப்பிடுகிறார்?

(A) ஊருணி (B) கடல்

(C) ஆறு (D) ஏரி

(E) விடை தெரியவில்லை

163. Match the following:

(a)	Sivasubramanianar	1.	Kayathar Fort
(b)	Kattabomman	2.	Sangagiri Fort
(c)	Marudhu Brothers	3.	Nagalapuram
(d)	Dheeran Chinnamalai	4.	Thirupathur Fort

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	4	2
(B)	3	4	1	2
(C)	3	1	2	4
(D)	4	1	3	2

(E) Answer not known

பொருத்துக :

(a)	சிவசுப்ரமணியனார்	1.	கயத்தாறு கோட்டை
(b)	கட்டபொம்மன்	2.	சங்ககிரி கோட்டை
(c)	மருது சகோதரர்கள்	3.	நாகலாபுரம்
(d)	தீரன் சின்னமலை	4.	திருப்பத்தூர் கோட்டை

	(a)	(b)	(c)	(d)
(A)	3	1	4	2
(B)	3	4	1	2
(C)	3	1	2	4
(D)	4	1	3	2

(E) விடை தெரியவில்லை

166. Choose the correct statement:

(i) The Palayakkarars system was in practice in the Kakatiya Kingdom.

(ii) Puli Thevar recaptured Nerkattumseval in 1764 after the death of Khan Sahib.

(iii) Yusuf Khan was negotiating with the Palayakkarars, without informing the company administration was charged with treachery and hanged in 1764.

(iv) Ondiveeran led one of the army units of Kattabomman.

(A) (i), (ii) and (iv) are correct

(B) ✓ (i), (ii) and (iii) are correct

(C) (iii) and (iv) are correct

(D) (i) and (iv) are correct

(E) Answer not known

சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.

(i) பாளையக்காரர் முறை காக்கத்தியப் பேரரசின் நடைமுறையில் இருந்தது.

(ii) கான் சாகிப்பின் இறப்பிற்குப்பின் பூலித்தேவர் நெற்கட்டும் சேவலை 1764-இல் மீண்டும் கைப்பற்றினார்.

(iii) கம்பெனி நிர்வாகத்திற்குத் தகவல் அளிக்காமல் பாளையக்காரர்களே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதால் யூசப்கான் துரோகி என்று குற்றம் சுமத்தப்பட்டு 1764இல் தூக்கிலிடப்பட்டார்.

(iv) ஒண்டிவீரன் கட்டபொம்மனின் படைப்பிரிவுகளில் ஒன்றைத் தலைமையேற்று வழிநடத்தினார்.

(A) (i), (ii) மற்றும் (iv) ஆகியவை சரி

(B) (i), (ii) மற்றும் (iii) ஆகியவை சரி

(C) (iii) மற்றும் (iv) ஆகியவை சரி

(D) (i) மற்றும் (iv) ஆகியவை சரி

(E) விடை தெரியவில்லை

192. Match the place of excavation with the district it is located :

	Place of excavation		District
(a)	Keezhadi	1.	Thoothukudi
(b)	Korkai	2.	Ariyalur
(c)	Gangaikonda Cholapuram	3.	Thanjavur
(d)	Kurumbanmedu	4.	Sivagangai

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	2	1	4
(C)	4	1	2	3
(D)	1	4	3	2

(E) Answer not known

அகழ்வாராய்ச்சி இடங்களை அதன் மாவட்டத்துடன் பொருத்துக.

	அகழ்வாராய்ச்சி இடங்கள்		மாவட்டம்
(a)	கீழடி	1.	தூத்துக்குடி
(b)	கொற்கை	2.	அரியலூர்
(c)	கங்கை கொண்ட சோழபுரம்	3.	தஞ்சாவூர்
(d)	குரும்பன்மேடு	4.	சிவகங்கை

	(a)	(b)	(c)	(d)
(A)	4	3	2	1
(B)	3	2	1	4
(C)	4	1	2	3
(D)	1	4	3	2

(E) விடை தெரியவில்லை

199. What are the ornaments of a nation according to the sequence of Valluvar?

(1) Wealth

(2) Joy

(3) Defence

(4) Health

(5) Yield

(A) (4), (1), (5), (2), (3)

(B) (1), (2), (3), (4), (5)

(C) (4), (3), (5), (2), (1)

(D) (1), (4), (3), (5), (2)

(E) Answer not known

நாட்டிற்கு அணிகலனானவற்றை வள்ளுவர் எந்த வரிசையில் தந்துள்ளார்?

(1) செல்வம்

(2) இன்பம்

(3) ஏமம்

(4) பிணியின்மை

(5) விளைவு

(A) (4), (1), (5), (2), (3)

(B) (1), (2), (3), (4), (5)

(C) (4), (3), (5), (2), (1)

(D) (1), (4), (3), (5), (2)

(E) விடை தெரியவில்லை

200. What are looked upon as the "true jewels" for anyone by Thiruvalluvar?

(A) Love and Virtue

(B) Humility and Pleasant Words

(C) Knowledge and Power

(D) Family Life and Renounced Life

(E) Answer not known

ஒருவருக்குச் சிறந்த அணிகலன்களாக இருப்பவை என வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

(A) அன்பும் அறனும்

(B) பணிவும் இன்சொல்லும்

(C) அறிவும் ஆற்றலும்

(D) இல்லறமும் துறவறமும்

(E) விடை தெரியவில்லை

TNPSC பொது அறிவுத் தேர்வு - பத்தாம் வகுப்பு தரம்			
தேர்வின் பெயர்	EXECUTIVE OFFICER, GRADE- IV		
தேர்வு எண்	ஆண்டு	தேர்வு நாள்	Unit - 8
02	2022	September 11, 2022	16 கேள்விகள்

Tamilnadu - Social Reform Movements - UNIT 9 in Degree Syllabus
Tamilnadu - Social Reform Movements - UNIT 8 in SSLC Syllabus

101. Who was the founder of 'Dravida Mahajana Sabha'?

(A) Sir P.T. Thiyagaraya
(B) Iyotheedaasar Pandithar ✓
(C) Jyothiba Phule
(D) Ayya Vaikundhar
(E) Answer not known

திராவிட மகாஜன சபையை நிறுவியவர் யார்?

(A) சர் P.T. தியாகராயர்
(B) அயோத்திதாசர் பண்டிதர்
(C) ஜோதிபா பூலே
(D) அய்யா வைகுந்தர்
(E) விடை தெரியவில்லை

102. Who is popularly known as "Vallalar"?

(A) Rama Krishna
(B) Iyothee Thassar
(C) Ramalinga Adigal ✓
(D) Ayyan Kali
(E) Answer not known

"வள்ளலார்" எனப் பலராலும் அறியப்பட்டவர்?

(A) இராம கிருஷ்ணர்
(B) அயோத்திதாசர்
(C) இராமலிங்க அடிகள்
(D) அய்யன்காளி
(E) விடை தெரியவில்லை

103. Which of the following pairs is not correct?

(i)	Pattinappalai	–	Katiyalur Urithiran Kannanar
(ii)	Patitruppattu	–	Speaks of Eight Chera Kings
(iii)	Madurai Kanchi	–	Refers to Mudukudumi Peruvazhuthi
(iv)	Thiruvanchikalam	–	Refers to Karikala Chola

(A) (i) and (ii)

(B) (ii) and (iii)

(C) (iii) only

(D) (iv) only

(E) Answer not known

கீழ்க்கண்ட இணைகளில் எது தவறானது?

(i)	பட்டினப்பாலை	–	கடியலூர் உருத்திரங் கண்ணனார்
(ii)	பதிற்றுப்பத்து	–	எட்டு சேர மன்னர்கள் குறித்து பேசுகிறது
(iii)	மதுரைக் காஞ்சி	–	முதுகுடுமி பெருவழுதி பற்றி குறிப்பிடுகிறது
(iv)	திருவஞ்சைக்களம்	–	கரிகால சோழனை பற்றி கூறுகிறது

(A) (i) மற்றும் (ii)

(B) (ii) மற்றும் (iii)

(C) (iii) மட்டும்

(D) (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

OVERLAPPING WITH INM SSLC SYLLABUS

136. ———— was the first woman to pay penalty for violation of salt laws in Tamil Nadu.

(A) Rukmani Lakshmipathi

(B) Ambujammal

(C) Lakshmi Sahgal

(D) Muvalur Ramamirtham

(E) Answer not known

தமிழ் நாட்டில் உப்பு சட்டங்களை மீறியதற்காக அபராதம் கட்டிய முதல் பெண்மணி ———— ஆவார்.

(A) ருக்மணி லட்சுமிபதி

(B) அம்புஜம்மாள்

(C) லட்சுமி செகல்

(D) மூவலூர் இராமாமிர்தம்

(E) விடை தெரியவில்லை

138. How should we punish those who harm us according to Valluvar?

(A) Do harm to them

(B) Give advice to them

(C) Do good to them

(D) Go subservient to them

(E) Answer not known

தீங்கு செய்பவரைத் தண்டிப்பதற்கு உரிய வழியாக வள்ளுவர் எதனைச் சுட்டுகிறார்?

(A) அவருக்குத் தீமை செய்தல்

(B) அவருக்கு அறிவுரை கூறல்

(C) அவருக்கு நன்மை செய்தல்

(D) அவருக்குப் பணிந்து போதல்

(E) விடை தெரியவில்லை

139. How does Valluvar interpret the friendship of a person whose words have no relation to his deeds?

(A) It will be paining even in reality
(B) It will be painful even in dreams
(C) It will be painful in next birth
(D) It will be painful in happiness
(E) Answer not known

சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாதவரின் நட்பை வள்ளுவர் எவ்வாறு சுட்டுகிறார்?

(A) நனவிலும் துன்பம் தரும்
(B) கனவிலும் துன்பம் தரும்
(C) மறுமையிலும் துன்பம் தரும்
(D) இன்பத்திலும் துன்பம் தரும்
(E) விடை தெரியவில்லை

140. What is called as sore by Valluvar?

(A) Fate
(B) Meat
(C) Eye
(D) Sickness
(E) Answer not known

புண் என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(A) ஊழ்
(B) புலால்
(C) கண்
(D) நோய்
(E) விடை தெரியவில்லை

141. What does Valluvar suggest to increase virtue?

(A) To speak angrily

(B) To speak proudly

(C) To speak gracious words

(D) To speak with ill will

(E) Answer not known

'அறம் பெருகும் வழி' எனத் திருவள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

(A) கோபச் சொற்களைக் கூறுதல்

(B) புகழ்ச் சொற்களைக் கூறுதல்

(C) இனிய சொற்களைக் கூறுதல்

(D) பழியுடை சொற்களைக் கூறுதல்

(E) விடை தெரியவில்லை

142. At whom will all the five elements of the body laugh at, according to Valluvar?

(A) Impostor/Cheat/Pretender

(B) Indisciplined

(C) Liar

(D) Uneducated

(E) Answer not known

உடலில் கலந்துள்ள பஞ்ச பூதங்களும் யாரைப் பார்த்துச் சிரிக்கும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) வஞ்சமனத்தான்

(B) ஒழுக்கமில்லாதான்

(C) பொய்யுரைப்பவன்

(D) கல்லாதான்

(E) விடை தெரியவில்லை

151. The Sangam Age was associated with _____Metal Age.

(A) Copper (B) Iron

(C) Gold (D) Silver

(E) Answer not known

சங்க காலம் என்பது ———————— உலோக காலத்தோடு தொடர்புடையது.

(A) செம்பு (B) இரும்பு

(C) தங்கம் (D) வெள்ளி

(E) விடை தெரியவில்லை

Tamilnadu - Social Reform Movements - UNIT 9 in Degree Syllabus
Tamilnadu - Social Reform Movements - UNIT 8 in SSLC Syllabus

152. When was the "Samarasa Suddha Sanmarga Satya Sanga" of Vallalar started?

(A) 1865 (B) 1867

(C) 1866 (D) 1868

(E) Answer not known

வள்ளலாரின் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்" எப்போது நிறுவப்பட்டது?

(A) 1865 (B) 1867

(C) 1866 (D) 1868

(E) விடை தெரியவில்லை

154. High literacy level of Tamil people by 6th century BCE has been indicated in the Tamil-Brahmi script excavated at

(A) Keezhadi

(B) Kodumanal

(C) Alangulam

(D) Uraiyur

(E) Answer not known

தமிழக மக்கள் 6–ஆம் நூற்றாண்டியிலிருந்தே எழுத்தறிவு பெற்றிருந்தனர் என்பதை கூறும் தமிழ்–பிரமி எழுத்துப் பொறிப்புகள் ———————— இடத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(A) கீழடி

(B) கொடுமணல்

(C) ஆலங்குளம்

(D) உறையூர்

(E) விடை தெரியவில்லை

188. How does Valluvar call the king who administers justice and protection?

(A) Life to people

(B) Heaven's Nectar to people

(C) ✔ King as god

(D) The Body mass of the people

(E) Answer not known

நீதிநெறியுடன் மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளரை வள்ளுவர் எவ்வாறு அழைக்கிறார்?

(A) மக்கட்கு உயிர்

(B) மக்கட்கு அமிழ்து

(C) மக்கட்கு இறை

(D) மக்கட்கு உடல்

(E) விடை தெரியவில்லை

189. What according to Valluvar is the enemy that destroys laughter and happiness of mankind?

(A) Fear

(B) Envy

(C) Sorrow

(D) ✔ Wrath

(E) Answer not known

ஒருவரின் நகைக்கும் உவகைக்கும் பகையாக இருப்பது எது என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார்?

(A) அச்சம்

(B) அழுக்காறு

(C) அழுகை

(D) சினம்

(E) விடை தெரியவில்லை

190. What four blames will stay with an adulterer?

(A) Delight, Distress, Happiness and Material wealth

(B) ✔ Enmity, Pretence, Fear and Guilt

(C) Wealth, Pride, Splendour and Greatness

(D) Poverty, Distress, Blame and Disease

(E) Answer not known

பிறனில் விழைவானிடத்து எவை நான்கு நீங்காது இருக்கும்?

(A) இன்பம், துன்பம், மகிழ்ச்சி, பொருள்

(B) பகை, பாவம், அச்சம், பழி

(C) பொருள், பெருமை, சிறப்பு, மேன்மை

(D) வறுமை, துன்பம், பாவம், நோய்

(E) விடை தெரியவில்லை

191. How does Valluvar compare the wealth of a stingy person?

(A) Similar to a fruit tree at the center of home town

(B) Similar to the hidden wealth that goes in vain

(C) Similar to weeds not having values

(D) ✔ Like a poisonous tree bearing fruit in the middle of a town

(E) Answer not known

பிறரால் விரும்பப்படாதவன் செல்வத்தைத் திருவள்ளுவர் எதற்கு ஒப்பாகக் கூறுகின்றார்?

(A) ஊர் நடுவில் இனிய மரம் பழுத்தது போன்றது

(B) யாருக்கும் பயன்படாது புதைத்து வைக்கும் செல்வத்துக்கு ஒப்பாகும்

(C) களைகளைப் போன்று பயனற்றதாம்

(D) ஊர்நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது

(E) விடை தெரியவில்லை

TNPSC பொது அறிவுத் தேர்வு - பத்தாம் வகுப்பு தரம்			
தேர்வின் பெயர்	ASSISTANT TRAINING OFFICER & JUNIOR TECHNICAL ASSISTANT		
தேர்வு எண்	ஆண்டு	தேர்வு நாள்	Unit 8 தமிழக வரலாறு
03	2023	October 5, 2023	16 கேள்விகள்

146. Which of the following is correctly matched?
பின்வருவனவற்றுள் எது சரியாக பொருத்தப்பட்டுள்ளது?

1.	Major Bannerman மேஜர் பானெர்மென்	– –	The Siege of Panchalamkurichi பாஞ்சாலங்குறிச்சி முற்றுகை
2.	Colonel Agnew and Innes கர்னல் அக்னியூ மற்றும் இன்னஸம்	– –	Maruthu Brothers மருது சகோதரர்கள்
3.	Colonel Heron கர்னல் ஹெரான்	– –	Puli Thevar புலித்தேவர்
4.	Chief Sir John Cradock தலைமைத் தளபதி சர்ஜான் கிரடாக்	– –	Vellore Revolt 1806 வேலூர் கலகம்1806

(A) 1, 2 are correct
1, மற்றும் 2 சரி

(B) 1, 3, 4 are correct
1, 3 மற்றும் 4 சரி

(C) 1, 2, 3 are correct
1, 2, 3 சரி

(D) 1, 2, 3, 4 are correct
1, 2, 3, 4 சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

Tamil Nadu - Early agitations against British Rule

152. Choose the correct answer :
சரியான விடையைத் தேர்வு செய்க :

Vanchinathan was one of the members of a radical group called
வாஞ்சிநாதன் உறுப்பினராக இருந்த புரட்சிகர தேசியவாதக் குழுவின் பெயர்

(A) Anandmath
அனந்தமடம்

(B) Dawn society
விடிவெள்ளிக் கழகம்

(C) Bharata Mata Association
பாரத மாதா குழு

(D) Pacific Coast Hindustan
பசிபிக் பிரதேச இந்துஸ்தான் அமைப்பு

(E) Answer not known
விடை தெரியவில்லை

153. What is compared to the activity of speaking without knowledge in a scholars meet by Valluvar?
நிறைந்த அறிவாற்றல் இல்லாமல் சான்றோர் அவையில் பேசுவதை வள்ளுவர் எதனுடன் ஒப்பிடுகிறார்?

(A) Live without love
அன்பின்றி வாழ்தல்

(B) Dancing without a stick
கோல் இன்றி ஆடுதல்

(C) Playing Dice without a board
அரங்கின்றி வட்டாடுதல்

(D) Living without working
உழைப்பின்றி வாழ்தல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

154. "...Plucking an unripe fruit when there are ripe ones"?
– In this Kural what is referred to as 'unripe fruit'?

"கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" – இக்குறளில் 'காய்' என்று வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

(A) Meaningless words
பொருளற்ற சொல்

(B) Harsh words
கடுஞ்சொல்

(C) Words without love
அன்பில்லாத சொல்

(D) Slang words
கொச்சைச் சொல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

155. Who according to Valluvar gains loveable place in the minds of all?
வள்ளுவரின் கருத்துப்படி, உலகத்தார் மனங்களில் வாழ்பவர் யார்?

(A) Men who speak truth
உண்மையைப் பேசுபவர்

(B) Men of sweet speech
இனிய சொல் கூறுபவர்

(C) Men of beauty and richness
அழகிய உருவம் உடையவர்

(D) Men who are at others wits end
பிறர் சொற்கேட்டு நடப்பவர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

156. What will happen to the wealth that has been required by fradulence according to Valluvar?
களவினால் உண்டாகும் பெருஞ்செல்வம் எவ்வாறு கெடும் என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

(A) Perish little by little
சிறுகச் சிறுக கெடும்

(B) Perish a little
குறைவாகக் கெடும்

(C) Perish without growth
வளராமல் கெடும்

(D) Will result in limitless ruin
அளவு இறந்து ஆவது போலக் கெடும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

157. What should we do to the wealth that comes without grace and love according to Valluvar?

அருளொடும் அன்போடும் வாராப் பொருளை என்ன செய்ய வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்?

(A) Gather it
சேகரித்துவிடல்

(B) Avoid as evil
புரளவிடல்

(C) Spend it
செலவிடல்

(D) Accept it
ஏற்றுக் கொளல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

158. What according to Valluvar breaks the cycle of rebirth?

பிறப்பறுக்கும் தன்மையாக வள்ளுவர் எதனைக் குறிப்பிடுகிறார்?

(A) Philanthropy
வள்ளல் தன்மை

(B) State of detatchment
பற்றற்ற நிலை

(C) A kind heart
அன்புள்ளம்

(D) Compassionate
இரங்குதல்

(E) Answer not known
விடை தெரியவில்லை

159. In Tamil Nadu Neolithic culture site found in

புதிய கற்கால பண்பாடு தமிழ்நாட்டில் பரவியிருந்த இடம்

(A) Kanniyakumari
கன்னியாகுமரி

(B) Paiyampalli
பையம்பள்ளி

(C) Kodumanal
கொடுமணல்

(D) Adichanallur
ஆதிச்சநல்லூர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

160. ———————— was the Tamil drama based on the English story "The Secret Way".

'இரகசிய வழி' என்ற ஆங்கில கதையை தழுவி இயற்றப்பட்ட தமிழ் நாடகம் ———————— ஆகும்.

(A) Shakuntala Vilasam
சகுந்தலை விலாசம்

(B) Nandanar Charitram
நந்தனார் சரித்திரம்

(C) Ratnaveli
ரத்னாவளி

(D) Manonmaniam
மனோன்மணீயம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

161. Assertion [A] : The Fort of Sivagiri was eminently suited both for offensive and defensive operations.

கூற்று [A] : சிவகிரி கோட்டைத் தாக்குதல் மற்றும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பானதாக இருந்தது.

Reason [R] : It is at the fort of western Ghats with formidable barriers around it.

காரணம் [R] : மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் வலுவான அரண்களோடு அது அமைக்கப்பட்டிருந்தது.

(A) [A] is correct, [R] is not the correct explanation of [A]
கூற்று [A] சரி, காரணம் [R] கூற்று [A] க்கு சரியான விளக்கமல்ல

(B) Both [A] and [R] are wrong
கூற்று [A] மற்றும் காரணம் [R] தவறானவை

(C) [A] is correct, [R] is the correct explanation of [A]
கூற்று [A] சரி, காரணம் [R] கூற்று [A] க்கு சரியான விளக்கம் ஆகும்

(D) [A] is wrong, [R] is correct
கூற்று [A] தவறு காரணம் [R] சரி

(E) Answer not known
விடை தெரியவில்லை

162. Find out the wrong statement :

தவறான கூற்றினைத் தேர்வு செய்க :

(i) Velu Nachiyar was the daughter of Chellamuthu Sethupathy, the Raja of Ramanathapuram.

வேலு நாச்சியார் இராமநாதபுரம் அரசரான செல்லமுத்து சேதுபதியின் மகள் ஆவார்.

(ii) Pagoda was a gold coin of Vijayanagar descent.

விஜய நகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது.

(iii) In 1801 Marudhu Brothers issued the Tiruchirapalli proclamation.

மருது சகோதரர்கள் 1801 இல் 'திருச்சிராப்பள்ளி பேரறிக்கையை' வெளியிட்டனர்.

(iv) On 16, May 1761, Puli Thevar's three major forts Nerkattumseval Ramanathapuram, Sattur came under the control of Maruthu brothers.

1761, மே 16 நாள் புலிதேவனின் முக்கியமான மூன்று கோட்டையான நெற்காட்டும்சேவல், இராமநாதபுரம், சாத்தூர் மருது சகோதரர்கள் வசமாயின.

(A) (i) and (ii)
(i) மற்றும் (ii)

(B) (ii) and (iv)
(ii) மற்றும் (iv)

(C) (i) and (iii)
(i) மற்றும் (iii)

(D) (iv) only
(iv) மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

Social reformers, Social reform movements - Tamil Nadu
(UNIT 9 of Degree level Syllabus kept in UNIT 8 of SSLC Level Syllabus.)
(Because Syllabus framer was slept while making the Syllabus 😜)

164. Who established the Satya Dharma Salai Vadalur?
வடலூரில் சத்ய தர்ம சாலையை, ஏற்படுத்தியவர் யார்?

(A) Ramalinga Adigal
இராமலிங்க அடிகள்

(B) Iyotheethoss Pandithar
அயோத்திதாச பண்டிதர்

(C) Maraimalai Adigal
மறைமலை அடிகள்

(D) Arumuga Navalar
ஆறுமுக நாவலர்

(E) Answer not known
விடை தெரியவில்லை

166. ———— was established by the Justice Party Government for the selection of Government officials in 1924.
அரசு அதிகாரிகளைத் தேர்வு செய்ய நீதிக் கட்சியால் 1924-ல் நிறுவப் பெற்றது

(A) Staff Selection Commission
பணியாளர் தேர்வாணையம்

(B) Public Service Commission
பொதுப் பணி ஆணையம்

(C) Staff Selection Board
பணியாளர் தேர்வு வாரியம்

(D) Provincial Staff Recruitment Board
மாநிலப் பணியாளர் ஆளெடுப்பு வாரியம்

(E) Answer not known
விடை தெரியவில்லை

167. Choose the correct answer about the Devadasi system :

தேவதாசி முறையைப் பற்றிய சரியான கூற்றினை / கூற்றுகளை தேர்ந்தெடுக்கவும்.

I. Dr. Muthulakshmi dedicated herself for the cause of abolishing this practice.

இந்த நடைமுறையை ஒழிக்க டாக்டர் முத்துலட்சுமி தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

II. She was the first woman doctor in India.

அவர் இந்தியாவின் முதல் பெண் மருத்துவர் ஆவார்.

III. She proposed the bill in 1945.

அவர் 1945 இல் மசோதாவை முன்மொழிந்தார்.

(A) Only I and II
I மற்றும் II மட்டும்

(B) Only II
II மட்டும்

(C) Only III
III மட்டும்

(D) Only II and III
II மற்றும் III மட்டும்

(E) Answer not known
விடை தெரியவில்லை

Role of women in freedom struggle
https://stap.tn.gov.in/index.php/2021/11/16/lakshmi-sahgal/

163. Name the commander of the Rani of Jhansi regiment of the Indian National Army.

இந்திய தேசிய இராணுவத்தின் ஜான்சி ராணி படைப்பிரிவினை தலைமை தாங்கியவர்.

(A) Aruna Asaf Ali
அருணா ஆசப் அலி

(B) Usha Mehta
உஷா மேத்தா

(C) Dr. Lakshmi
டாக்டர். லட்சுமி

(D) Kalpana Dutt
கல்பனா தத்

(E) Answer not known
விடை தெரியவில்லை

Just TNPSC

All the Best

Visit our website to Download TNPSC New Syllabus Previous Year Subject wise Question Bank PDFs for All 10 GS Subjects.

www.justtnpsc.com

OR

OPEN YOUR BROWSER
Goto Google
Type "just tnpsc"
& Search

For Latest Updates join our Telegram, Youtube ,Whatsapp channels

Our Just TNPSC Academy is the One & Only Exclusive Academy For TNPSC (New Syllabus) Previous Year Question Answers providing Monthly Regular Subject wise Question Answers PDF Updates to TNPSC Aspirants

Youtube Channel
https://www.youtube.com/@JustTNPSCacademy

Telegram Channel
https://t.me/JustTNPSCacademy

WhatsApp Channel
https://whatsapp.com/channel/0029VaCDY8NFHWpynrNHGo1m